www.agaram.lk

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | சைவநெறி | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:............................................................................. | 12 | T | I |

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

### பகுதி – I

**மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

01. கணபதியை முழுமுதற் கடவுளாக போற்றும் சமயம்
    1. சைவம்  2. கௌமாரம்  3. காணாபத்தியம்  4. சாக்தம்

02. இந்து சமயத்தின் முதல் நூல்களாகப் போற்றப்படுவன,
    1. தேவாரம், திருவாசகம்  2. பெரியபுராணம், கந்தபுராணம்
    3. இராமாயணம், மகாபாரதம்  4. வேதங்கள், ஆகமங்கள்

03. 'பரம்பொருள் ஒன்றே' என்று பொருள்படும் சுலோகம் இடம்பெறுகின்ற வேதம்
    1. இருக்கு  2. யசுர்  3. சாமம்  4. அதர்வணம்

04. "அங்கமும் வேதமும் ஓதும் நாவர்........" என்ற பதிகத்தைப் பாடியவர்
    1. திருநாவுக்கரசர்  2. திருஞானசம்பந்தர்
    3. சுந்தரர்  4. சேக்கிழார்

05. தண்ணளி வெண்குடை வேந்தன் எனப்படுபவன்
    1. மனுநீதிகண்ட சோழன்  2. இராஜராஜ சோழன்
    3. இராஜேந்திர சோழன்  4. அநபாயச் சோழன்

06. பெரிய புராணத்தில் உள்ள விருத்தப்பாக்களின் எண்ணிக்கை
    1. 6842  2. 8642  3. 4286  4. 4682

07. அடியார்களின் வரலாற்றை விரித்துரைக்கும் நூல்
    1. திருத்தொண்டர் தொகை  2. திருத்தொண்டர் திருவந்தாதி
    3. திருத்தொண்டர் வாழ்த்து  4. திருத்தொண்டர் புராணம்

08. யாகங்களின் போது மேற்கொள்ள வேண்டிய சடங்கு முறைகளை விளக்குவன,

1. மந்திரங்கள் 2. பிராமணங்கள்
3. ஆரணியங்கள் 4. உபநிடதங்கள்

09. அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத................ என்ற பதிகம் பாடப்பெற்ற திருத்தலம்

1. திருவாரூர் 2. சிதம்பரம் 3. சீர்காழி 4. திருப்புன்கூர்

10. பாலுக்கு அழுத பாலகன் யார்?

1. வியாக்கிரபாதர் 2. பதஞ்சலி 3. உபமன்யு 4.சம்பந்தர்

11. உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது எனப் பாடியவர்

1. ஆறுமுகநாவலர் 2. விபுலானந்தர் 3. தாயுமானவர் 4. திருமூலர்

12. திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் முறையே,

1. சேக்கிழார், அநபாயசோழன் 2. நாதமுனிகள், திருமங்கை ஆழ்வார்
3. நாதமுனிகள், அரிமர்த்தன பாண்டியன் 4. நம்பியாண்டார் நம்பி, இராஜராஜசோழன்

13. திலகவதியாருடைய பெற்றோர்

1. புகழனார், மாதினியார் 2. சடையனார், இசைஞானியார்
3. சம்புபாதாசிரியர், சிவஞானவதியார் 4. சிவபாதவிருதயர், பகவதியார்

14. தமிழாகமம் எனச் சிறப்பிக்கப்படுவது

1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருமந்திரம் 4. பெரியபுராணம்

15. அனல்வாதத்தின் போது திருஞானசம்பந்தரால் எழுதி, தீயிலிடப்பட்ட பதிகம்

1. மந்திரமாவது நீறு 2. போகமார்ந்த பூண்முலையாள்
3. செய்யனே திருவாலவாய் 4. வாழ்க அந்தணர்

16. கேடும் ஆக்கமும் கொண்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் ...... எனக் குறிப்பிடப்படுவோர்

1. திருக்கூட்டத்து அடியார்கள் 2. செல்வம் உடையவர்கள்
3. ஏழ்மையில் வாடுபவர்கள் 4. கற்றறிந்தவர்கள்

17. மூவகை ஆன்மாக்கள்

1. பதி, பசு, பாசம் 2. ஆணவம், கன்மம், மாயை
3. சத்து, அசத்து, சதசத்து 4. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்

18. பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பகுதிகளைக் கொண்ட சைவசித்தாந்த நூல்

1. சிவஞானபோதம் 2. சிவஞானசித்தியார்
3. இருபாஇருப.்.து 4. உண்மை விளக்கம்

19. ‘அன்பே சிவம்’ எனக் கூறியவர்

1. அப்பர் 2. திருவள்ளுவர் 3. சேக்கிழார் 4. திருமூலர்

20. சைவசமயத்தின் பொதுநூல் எனப்படுவது

1. திருமந்திரம் 2. திருக்குறள் 3.ஆகமம் 4. வேதம்

21. வைகாசி மூல நட்சத்திரத்தில் முத்தியடைந்த நாயனார்

1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

22. “எவ்வுயிர்க்கும் அன்பாயிரு” எனக் கூறும் சமயநெறி

1. சமணம் 2. சைனம் 3. பௌத்தம் 4. சைவம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

23. மகோற்சவ காலத்தில் உற்சவங்களைத் தரிசிப்பதால் கிடைக்கும் தீட்சை
    1. நயனதீட்சை 2. ஸ்பரிச தீட்சை 3. சாம்பவ தீட்சை 4. வாசகதீட்சை
24. விபுலானந்தரின் பிரமச்சரிய நாமம்
    1. நரேந்திரன் 2. பிரபோதசைதன்யர்
    3. ஆறுமுகம் 4. மயில்வாகனம்
25. சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெற்றவர்
    1. அருணந்தி சிவாசாரியார் 2. மெய்கண்ட தேவர்
    3. உமாபதி சிவாசாரியார் 4. மறைஞான சம்பந்தர்
26. திருவதிகையில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நாயனார்
    1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்
27. புலாலுண்ணலைச் சைவநெறி அனுமதிப்பதில்லை. ஏனெனில்,
    1. கொல்லாமையைச் சிறந்த அறமெனக் கொள்வதால்
    2. பொய்யாமையைச் சிறந்த அறமெனக் கொள்வதால்
    3. புலால் உணவின் விலை அதிகமென்பதால்
    4. புலால் உணவைப் பெற்றுக் கொள்வது சிரமம் என்பதால்
28. வேதங்களின் மறுபெயர்கள் அடங்கிய தொகுதி
    1. சுயம்பு, எழுதாமறை, சங்கிதைகள் 2. எழுதாக்கிளவி, ஆரணியகங்கள், சுருதி
    3. எழுதாக்கிளவி, எழுதாமறை, சுருதி 4. சுருதி, சுயம்பு, பிராமணங்கள்
29. 'உள்பொருள் ஒன்றே, அதனையே அறிந்தோர் பல பெயர்களால் வழங்குவர்' என்ற பொருளமைந்த சுலோகம் இடம்பெறும் வேதம்
    1. அதர்வணம் 2. சாமம் 3. யசுர் 4. இருக்கு
30. 'பிடித்த பத்து' என்ற பாடல் பகுதியைப் பாடியவர்
    1. சம்பந்தர் 2. சுந்தரர் 3. மாணிக்கவாசகர் 4. அப்பர்
31. தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள இடம்
    1. திருவதிகை 2. திருவாரூர் 3. சிதம்பரம் 4. திருவீரட்டானம்
32. பவுத்திரம் அணிதல், காப்புக் கட்டுதல், ஓமம் வளர்த்தல், கன்னிகாதானம், ஏழடி வைத்தல் என்பன
    1. ஆலய மகோற்சவத்தின் போது நடைபெறும் கிரியைகள்
    2. திருமண மேடையில் நடைபெறும் கிரியைகள்
    3. நித்திய, நைமித்தியக் கிரியைகளில் இடம்பெறுவன
    4. நாட்டார் தெய்வ வழிபாடுகளில் இடம்பெறுவன
33. மனிதன் மனிதப் பண்புகள், ஆன்மீக விழுமியங்கள் என்பவற்றை வளர்த்து, உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டுவது
    1. விஞ்ஞானம் 2. சோதிடம் 3. பொருளியல் 4. சமயம்
34. சைவசமயத் தத்துவ அடிப்படையில் பதி குறிக்கும் பொருள்
    1. கடவுள் 2. உயிர் 3. மலம் 4. ஆன்மா

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

35. பஞ்சபுராணம் பாடப்படும் முறைகள்
    1. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்புகழ், பெரியபுராணம்
    2. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்
    3. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புகழ்
    4. தேவாரம், திருவிசைப்பா, திருவாசகம், திருப்பல்லாண்டு, பெரியபுராணம்
36. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மலர்களாலான நூல்
    1. யாழ் நூல்
    2. திருப்பல்லாண்டு
    3. திருமந்திரமாலை
    4. சிவஞானபோதம்
37. நாவுக்கரசர் ஈற்றில் பாடிய பதிகம்
    1. எண்ணுகேன் என் சொல்லி………..
    2. கூற்றாயினவாறு விலக்ககலீர்………
    3. நாமார்க்கும் குடியல்லோம்……….
    4. மாதர்ப் பிறைக்கண்ணியானை……..

பின்வரும் அட்டவணையில் A – I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 – 40 வரையான வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A திருமூலர் | D திருவதிகை | G மருணீக்கியார் |
| B திலகவதியார் | E காரைதீவு | H மூலன் |
| C விபுலானந்தர் | F திருக்கையிலை | I இராமகிருஷ்ண விஜயம் |

38. திருமுனைப்பாடி நாட்டிலே அவதரித்தவரோடு தொடர்புடையது
    1. AEH  2. BDG  3. BEH  4. CDI
39. உலக வாழ்க்கைக்குத் தேவையான ஒன்பது தந்திரங்களுடன் தொடர்புடையது
    1. AFH  2. BFI  3. CDG  4. AEH
40. வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் பற்றிய விடயங்களுடன் தொடர்புடையது
    1. DBH  2. GEC  3. EBG  4. IEC

(40X1 = 40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | சைவநெறி | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:…………………………………………………………………… | 12 | T | II |

**கவனிக்க:**

I.முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட எனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

### பகுதி – II

**01.** சுருக்கமான விடை எழுதுக.

1. இறைவனின் இரண்டு நிலைகளையும் தருக?
2. இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளும் எவை?
3. வேதங்களின் மூன்று காண்டங்களும் எவை?
4. சுந்தரர் கண்பார்வை இழந்தமைக்கான காரணம் யாது?
5. திருமுறை என்றால் என்ன?
6. ஆளுடைய பிள்ளையார் பாடிய பதிகங்களை யாழில் அமைத்துப் பாடியவர் யார்?
7. அகச் சந்தான குரவர் என அழைக்கப்படுவோர் யாவர்?
8. “உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது” எனக் கூறியவர் யார்?
9. யோகியோர் எனப்படுவோர் யாவர்?
10. சைவசிந்தாந்தம் கூறும் முப்பொருள்களும் எவை? (10X2 = 20 புள்ளிகள்)

**02.**

I. பின்வரும் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

II. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

அ) “அங்கமும் வேதமும் ஓது நாவர்” ………………...

ஆ) “மீளா அடிமை உமக்கே ஆளாய்”…......................

இ) “யாவர்க்குமாம் இறைவற்கு” ……………………….

ஈ) “விநாயகனே வெவ்வினையை” …………………….

உ) “பால் நினைந்து ஊட்டும்” ………………………...

(5X2 = 10 புள்ளிகள்)

agaram.lk

**03.** **மாசிலாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசினால் எத்திசையும் விளக்கினார்**
**பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்**

1. மேற்படி பாடல் இடம்பெறும் நூல் யாது? அது எத்தனையாம் திருமுறையில் இடம்பெறுகிறது?
2. இப்பாடலில் புனிதர்கள் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்? அவர்கள் அணியும் சிவசின்னங்கள் எவை?
3. இப்பாடலில் இடம்பெறும் சிவனடியார் இயல்புகள் எவை?

(2+4+4 = 10 புள்ளிகள்)

**04.** **"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"**

1. கோயில்களில் இடம்பெறும் ஆறுகாலப் பூசைகளும் எவை?
2. கொடிமரம், கொடிச்சீலை, கயிறு என்பன எவற்றைக் குறித்து நிற்கின்றன?
3. மகோற்சவங்களால் விளையும் நன்மைகள் எவை?

(3+3+4 = 10 புள்ளிகள்)

**05.** **"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

1. சமயகுரவர் நால்வரின் பெயர்களைத் தருக?
2. நாவுக்கரசர் புரிந்த அற்புதங்கள் மூன்றினையும், அவ்வேளை பாடப்பட்ட பதிகங்களின் முதல்வரிகளையும் தருக?
3. திருஞானசம்பந்தர் நின்ற நெறி, மார்க்கம், அடைந்த முத்தி என்பவற்றைத் தருக?

(2+4+4 = 10 புள்ளிகள்)

**06.** **"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"**

1. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?
2. சித்து, அசித்து, சிதசித்து என்பவற்றை விளக்குக?
3. ஐந்தொழில்களில் அருளல் எவ்வாறு நிகழ்கிறது? இதனை எவ்வாறு அழைக்கலாம்?

**07.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

1. திருமூலர்
2. வேதங்கள்
3. சுவாமி விபுலானந்த அடிகளாரின் பணிகள்
4. சைவசித்தாந்தம் கூறும் பதி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

# இரண்டாம் தவணைப் பரீட்சை 2019

## சைவநெறி தரம் - 10

## (புள்ளித்திட்டம்)

## பகுதி I

01. காணாபத்தியம்
02. வேதங்கள், ஆகமங்கள்
03. இருக்கு
04. திருஞானசம்பந்தர்
05. மனுநீதிகண்ட சோழன்
06. 4286
07. திருத்தொண்டர் புராணம்
08. பிராமணங்கள்
09. திருப்புன்கூர்
10. உபமன்யு
11. விபுலானந்தர்
12. நம்பியாண்டார்நம்பி, இராஜராஜ சோழன்
13. புகழனார், மாதினியார்
14. திருமந்திரம்
15. போகமார்ந்த பூண்முலையாள்
16. திருக்கூட்டத்து அடியார்கள்
17. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்
18. சிவஞானசித்தியார்
19. திருமூலர்
20. வேதம்
21. சம்பந்தர்
22. சைவம்
23. சாம்பவ தீட்சை
24. பிரபோதசைதன்யர்
25. அருணந்திசிவாசாரியார்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

26. அப்பர்
27. கொல்லாமையைச் சிறந்த அறமெனக் கொள்வதால்
28. எழுதாக்கிளவி, எழுதாமறை, சுருதி
29. இருக்கு
30. மாணிக்கவாசகர்
31. திருவாரூர்
32. திருமண மேடையில் நடைபெறும் கிரியைகள்
33. சமயம்
34. கடவுள்
35. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்
36. திருமந்திரமாலை
37. எண்ணுகேன் என் சொல்லி
38. BDG
39. AFH
40. IEC

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

## பகுதி II

**01.**

1. தடத்தநிலை, சொரூப நிலை

2. இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளாவன : சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம்

3. கர்மகாண்டம், உபாசனாகாண்டம், ஞானகாண்டம்

4. 'சங்கிலியாரைப் பிரியேன்' எனச் செய்த சத்தியத்தை மீறி, அவரைப் பிரிந்து சென்றமை.

5. சிவபிரானுடைய பெருமைகளைப் பேசும் அருட்பாடல்களின் தொகுப்பு

6. திருநீலகண்டப் பெரும்பாணர்

7. திருநந்திதேவர், சனற்குமாரமுனிவர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர்

8. சுவாமி விபுலானந்த அடிகளார்

9. அட்டமா சித்திகள் கைவரப்பெற்றோர்

10. பதி, பசு, பாசம்

**02.**

பாடல் - 03 புள்ளி

பொருள் - 02 புள்ளி

(மொத்தம் 5X2 = 10புள்ளிகள்)

**03.**

1. பெரியபுராணம், 12ம் திருமுறை

2. சிவனடியார்கள், விபூதி, உருத்திராக்கம்

3. I. உள்ளத் தூய்மை நிறைந்தவர்கள்

   II. தங்களது அருளொளியினால் எல்லாத் திக்கிலும் உண்மை ஒளி பிரகாசிக்கும்படி செய்தவர்கள்.

   III. எம்மால் எழுத்துரைக்க முடியாத பெருமை விளங்கப் பெற்றவர்கள்.

**04.**

1. உஷாக்கலாப் பூசை

   காலைச்சந்திப் பூசை

   உச்சிக்காலப் பூசை

   சாயங்காலப் பூசை

   இரண்டாங்காலப் பூசை

   அர்த்தசாமப் பூசை

2. கொடிமரம் - பதி

   கொடிச்சீலை – பசு

   கயிறு – பாசம்

3. I. ஊர்மக்களை ஒன்று சேர்க்கின்றன.

   II. ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்கின்றன.

   III. மக்கள் மனத்தில் நற்பண்புகளை வளர்க்கின்றன.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

IV. அமைதியான புத்துலகில் வாழ வழி செய்கின்றன.

## 05.

1. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்
2. கல்லோடு கட்டிக் கடலில் விட்டபோது – சொற்றுணை

   சுண்ணாம்பு அறையில் அடைத்த போது – மாசில் வீணையும்

   மதங்கொண்ட யானையை ஏவிய போது – சுண்ணவெண்

   (பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்)
3. நெறி - கிரியை

   மார்க்கம் - சற்புத்திர மார்க்கம்

   முத்தி – சாமீபம்

## 06.

1. அருவம், உருவம், அருவுருவம்
2. சித்து – அறிவு வடிவமானது / அறிவிக்காமலே அறியும் பொருள்

   அசித்து – அறிவித்தாலும் அறியமாட்டாதவை

   சிதசித்து – ஆன்மாக்கள் தாமாகவே அறியவல்லன அல்ல. அவை அசித்தாகவும் அறிவித்தால் அறியவல்லன என்பதால் சித்தாகவும் விளங்குபவை.
3. I. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் ஆகிய நான்கு தொழில்களினதும் பயனாக ஆணவ மலம் வலிகெட்டு நிற்கும் போது இறைவனது அருள் ஆன்மா மீது பதிதல் அருளல் எனப்படுகிறது.

   II. சத்திநிபாதம்

## 07.

பொருத்தமான விடைகளுக்குப் புள்ளி வழங்கவும்.

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!